சுருக்கம்

பள்ளிக்கல்வி - பள்ளி இறுதித் தேர்வில் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்களில் முகப்பெழுத்து / பெயர் / பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் மேற்கொள்ள சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களே ஆய்வு செய்வது - அரசுத் தேர்வுகள் இயக்குநரால் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்பு மாணவ / மாணவியர்களின் இதர கல்விச் சான்றுகளில் சார்ந்த பள்ளியிலேயே திருத்தங்களை மேற்கொள்ள முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுமதி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி(அ.தே.)த்துறை

அரசாணை(நிலை) எண்.177

நாள் 23.12.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம், மார்கழி-08

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை(நிலை) எண்.39, கல்வித் துறை, நாள் 12.01.1944.
2. அரசாணை (நிலை) எண்.719, கல்வித் துறை, நாள் 20.04.1976.
3. அரசாணை(நிலை) எண்.101, பள்ளிக்கல்வி (வரவு /செலவு-1) துறை, நாள் 18.05.2018.
4. அரசாணை(வாலாயம்) எண்.2027, பொதுத்(Special) துறை, நாள் 14.05.2021.
5. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க. எண்.029664/ எம்/இ3/2021, நாள் 07.08.2021.

---------------

ஆணை:-

அரசுத் தேர்வுத் துறையினரால் நடத்தப்படும் இடைநிலை பள்ளி இறுதி தேர்வில் மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழில், பெயர் மற்றும் பிறந்த தேதி திருத்தம் தொடர்பான பதிவு மேற்கொள்ளும் போது பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்து தமிழ்நாடு இடைநிலைக் கல்வி சான்று விதி எண்.5-இல் பத்தாம் வகுப்பு அரசுத் தேர்விற்கு பெயர்ப்பட்டியல் அனுப்பப்படும் முன்னர் உரிய அசல் சான்றுகளின் அடிப்படையில் பிறந்த தேதி திருத்தங்களை தொடர்புடைய பள்ளித்தலைமை ஆசிரியர்களே செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், பள்ளிப்படிப்பை முடித்து பத்தாம் வகுப்பு அரசு தேர்வு எழுதிய பின்னர் பள்ளிச் சான்றுகளில் பிறந்த தேதி திருத்தம் மேற்கொள்வது ஏற்கத்தக்கதல்ல என்று திருத்தம் செய்ததனைத் தொடர்ந்து மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சில நேர்வுகளில் மதிப்பெண் பட்டியலில் திருத்தம் செய்து ஆணை வழங்க Director of Public Instruction அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2. அதனைத் தொடர்ந்து, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்ட இரண்டு வகையான மாணவர்களுக்கு மட்டும் மதிப்பெண் சான்றிதழ்களில் திருத்தம் மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

i. Category-1: With regard to the first category whenever a request for alteration of date of birth in the SSLC Book is made by a person who continues to be a student of the Secondary School, the Government directs that the Director of School Education should consider the application for alteration of date of birth and pass orders on merits. The applicant has to let in evidence in support of the application and the onus to establish that the original entry was wrong is on the applicant. The Director of School Education should examine the evidence that is placed before him and pass orders.

ii. Category-2: With regard to the applications for alteration of the date of birth in respect of persons who have ceased to be students, in G.O. (Ms) No.39, Education dated 12.01.1944, the Government authorized the Director to order corrections at any time in the date of birth as recorded in the SSLC book in the following circumstances:

- when an obviously absured entry has to be set right and
- when a Civil Court directs correction in any individual cases.

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி ஆணையர், மேற்குறிப்பிடப்பட்ட இரு வகையான மாணவ/ மாணவியர்களின் மதிப்பெண் சான்றிதழ்களில் திருத்தம் வெளியிடுவது தொடர்பாக முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் ஆகியோருடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு, திருத்தம் அவசியம் என்ற நேர்வுகளில், பள்ளிக்கல்வி இயக்குநரால் பரிந்துரை செய்யப்பட்டு அரசுத் தேர்வுகள் துறை இயக்குநருக்கு இதுநாள் வரையில் அறிக்கை அனுப்பப்பட்டு வந்தது என்றும், தற்போது மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் வருவாய் மாவட்ட அளவில் அனைத்து வகைப் பள்ளிகளையும் நிர்வகிக்கும் அதிகாரம் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்றும், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி பள்ளிக் கல்வி இயக்குநர் பணியிடமானது அதற்குரிய அதிகாரங்களுடன் பள்ளிக்கல்வித் துறை ஆணையர் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்ட நிலையில், பள்ளிக்கல்வி இயக்குநரால் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு தேர்வுத்துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்திடும் அதிகாரம் மற்றும் பள்ளி மாற்றுச் சான்றிதழ், சேர்க்கை நீக்கல் பதிவேடு, பதிவுத்தாள் மற்றும் இதர கல்விச் சான்றுகளில் பள்ளியில் திருத்தங்கள் மேற்கொள்ள ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியவற்றினை மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு வழங்கி மாணவ/மாணவியர்களின் மதிப்பெண் சான்றிதழ்களில் முகப்பெழுத்து/ பெயர் / பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் செய்வது சார்பான கருத்துருக்களை சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலர்களே ஆய்வு செய்து, அவர்கள் வழியாகவே அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுப்புவது குறித்தும், அரசுத் தேர்வுத்துறை மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்பு சார்ந்த மாணவ/ மாணவியர்களின் இதர கல்விச் சான்றுகளில் பள்ளியில் திருத்தங்கள் மேற்கொள்ள முதன்மைக் கல்வி அலுவலர் அளவிலேயே ஆணை வழங்கிட அனுமதி அளிக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்கூறிய நிலையில், பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று, பள்ளி இறுதித் தேர்வில் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்களில் முகப்பெழுத்து / பெயர் / பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் செய்வது சார்பான கருத்துருக்களை சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களே ஆய்வு செய்து, அவர்கள் வழியாகவே அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுப்பி அரசுத் தேர்வுத்துறை மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்பு மாணவ/மாணவியர்களின் இதர கல்விச் சான்றுகளில் பள்ளி அளவில் திருத்தங்களை மேற்கொள்ள சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களே ஆணை வழங்கிட அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர்,
சென்னை -6.
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை - 6
அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்,
(ப.க. ஆணையரகம் வழியாக).
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை - 6.
நகல்
மாண்புமிகு அமைச்சர் (ப.க)அவர்களின்
நேர்முக உதவியாளர்,
சென்னை -9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை,
சென்னை - 9.
பள்ளிக் கல்வி (ப.க.-5)த்துறை,
சென்னை - 9.
இருப்புக்கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23.12.2021
பிரிவு அலுவலர்
23-12-21